சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.146/2018

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11 ம் நாள் பி.வாசா.2 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாந்தி | வயது | 54 |
| க/பெ | சுதர்சன் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | சார்பதிவாளர் அலுவலகம்,<br>மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | சார்பதிவாளர்,<br>மேட்டுப்பாளையம் |

-

முதல் விசாரணை :

நான் தற்போது மேட்டுப்பாளையம் சார் பதிவாளர் அலுவலகத்தில் சார் பதிவாளராக பணி புரிந்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வந்துள்ளது. வா.சா. ஆ 1 ஆவணம் மேட்டுப்பாளையம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி தான். அந்த ஆவணம் 04.04.1997 அன்று ஆவண எண்.26 ஆக பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் ஆகும். அந்த ஆவணம் யார் எழுதிக் கொடுத்தது என்றால் கருப்ப போயன் குமாரர் கே. ராஜூ என்பவர் எழுதிக் கொடுத்து உள்ளார். பொதுவாக ஒரு ஆவணத்தை பதிவு செய்தால் அந்த ஆவணத்தை பற்றிய விபரம் சார் பதிவாளருக்கு தெரியும் என்றால் சரி தான். மற்ற ஆவணங்களை விட உயில் ஆவணங்களை பதிவு செய்யும் போது கொஞ்சம் கவனம் செலுத்தி தான் பதிவு செய்வார்கள் என்றால் சரி தான். அவ்வாறு பதிவு செய்யும் போது உயில் ஆவணத்தை எழுதிக் கொடுப்பவர் சார் பதிவாளரின் முன்பு ஒரு கையெழுத்து போட வேண்டும் என்றால் சரி தான். வா.சா. ஆ 1ல் சார் பதிவாளர் முன்பு கையெழுத்து போட்டார் என்றால் அந்த ஆவணம் பதிவு செய்த போது நான் பணியில் இல்லாததால் எனக்கு தெரியாது. வா.சா. ஆ 1 ல் கட்டணம்

செலுத்தியது யார் என்றால் ராஜூ என்பவர் செலுத்தியதாக உள்ளது. எழுதிக் கொடுத்ததாக ஒப்புக் கொண்டு அவர் இடது கை பெருவிரல் ரேகை வைத்துள்ளார். உயில் ஆவணம் எழுதியது ராஜூ என்பவர் தான் என்பதை நிரூபிக்க சாட்சிகள் இருக்க வேண்டும் என்றால் சரி தான் இன்னாரென்று நிரூபித்தவர்களாக ராஜூவை எத்தனை பேர் அடையாளம் காட்டி உள்ளார்கள் என்றால் இரண்டு பேர். விதிமுறைகளுக்கு உட்பட்டு தான் வா.சா. ஆ 1 பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி தான்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

Sd/-G.Gengaraj,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.